# தெய்வீக சுகமளித்தல்

4

சகோ.
பிரன்ஹாம்
அவர்களின்
மேற்கோள்கள்

(படங்களுடன்)

# நான் சுகமானேன்

இப்பொழுது, சுகமாகுதல் என்பது நீங்கள் வெறுமனே, “நல்லது, நான்... ஆமாம், நான் அதை விசுவாசிக்கிறேன். நான் அதை விசுவாசிக்கிறேன்” என்று கூறும் ஏதோவொன்றல்ல. இப்பொழுது, அதெல்லாம் சரிதான். அதுதான் நீங்கள் செய்யக் கூடிய சிறந்த காரியமாக இருந்து, வெறுமனே மனதில் சிந்தித்தோ அல்லது வெறுமனே, “நல்லது, நான்... ஆமாம், நான் – நான் அதைக் காண்கிறேன். நான் அதை விசுவாசிக்கிறேன்; நான் அதை ஏற்றுக் கொள்கிறேன்” என்று கூறுவீர்களானால். அதன்பிறகு நீங்கள் அதை அந்த அடிப்படையில் ஏற்றுக் கொள்வீர்களானால், தொடர்ந்து இடைவிடாமல் மீண்டும் மீண்டும் அதையே கூறிக் கொண்டிருங்கள். அதை உரத்த சத்தமாகக் கூறுங்கள். மீண்டும் மீண்டும் அதையே கூறிக் கொண்டிருங்கள்; அப்படியே தொடர்ந்து, “நான் சுகமானேன். நான் சுகமானேன்” என்று கூறிக் கொண்டிருங்கள். நீங்கள் உண்மையாகவே அதை விசுவாசிக்கும் மட்டுமாக அதையே கூறிக் கொண்டிருங்கள். நீங்கள் அதை விசுவாசிக்கும் போது, அப்பொழுது தான் அது சம்பவிக்கப் போகிறது.

நீங்கள் ஒரு எதிர்மறையான சாட்சியைக் கொண்டிருக்க வேண்டாம். நீங்கள், “நல்லது, நான் இன்னும் இன்றைக்கும் மோசமாகவே உணருகிறேன். நான் நினைக்கிறேன் நான்...” என்று அறிக்கை செய்யும் ஒவ்வொரு தடவையும். நீங்கள் சரியாக தொடக்கத்தில் இருந்த அதே குழியில் மீண்டும் நேராகப் போய் விடுவீர்கள்.

தேவனுடைய வெகுமதியை ஏற்றுக் கொள்ளுங்கள், 53-0219, பத்தி எண் 9

**Bro. Branham:**

8. ஒரு காரியம், ஜீவனும் மரணமும் ஒன்று சேர்ந்து இருக்க முடியாது. கிறிஸ்து எங்கே வருகிறாரோ, அவர் ஒரு போதும் தன்னுடைய முழு ஜீவியத்திலும் ஒரு அடக்க ஆராதனையையும் பிரசங்கித்ததில்லை, ஏனெனில் எங்கே ஜீவன் உள்ளதோ, அதை சுற்றி மரணத்தால் நிற்க முடியாது. அவர்கள் மரணத்திலிருந்து எழுந்தார்கள்.

~~~~~~~~

செய்தி: சகேயு, மே 17, 1958
~~~~~~~~

# சகலத்துக்கும் சுதந்தரவாளி



நீங்கள் ஜெபித்துக்கொள்ள முன்னால் வரும்போது, உங்களுக்கு இரட்சிப்பு தேவைப்பட்டால், அல்லது தெய்வீக சுகமளித்தல் தேவைப்பட்டால், அது எதுவானாலும், நீ விசுவாசியானால், ஒவ்வொரு வாக்குத்தத்தத்துக்கும் நீ சுதந்தரவாளியாகி விடுகிறாய். எனவே உன் விசுவாசத்தை அந்த வாக்குத்தத்தத்தின் மேல் வைத்து, முன்னே சென்று, சாத்தானிடம் ''அதை திரும்பக் கொடுத்து விடு! அதை திரும்பக் கொடுத்து விடு! அது என்னுடையது'' என்று சொல். அவன் உங்களை ஒரு வெற்று பயமுறுத்தலினால் ஏமாற்றும்படிக்கு விடாதீர்கள். அந்த வரிசையிலே நின்றுகொண்டிரு. அவன் அதை திரும்ப கொடுத்து விடுவான். அவன் திரும்பக் கொடுத்துவிடுவான் என்று தேவன் கூறியுள்ளார். ஆகவே அவன் அதை செய்தாக வேண்டும். அது உங்கள் அதிகாரம். அது உண்மை. சகலத்துக்கும் சுதந்தரவாளி!

செய்தி: சகலத்தையும் உடையவர்களாயிருத்தல்

# உங்களுடைய அறிகுறிகளை நோக்கிப் பார்க்க வேண்டாம்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை

## (GOD'S COVENANT WITH ABRAHAM)

சனிக்கிழமை மாலை, ஏப்ரல் 28, 1956
சம்பூரண ஜீவ மையம், சார்லெட்,
வட கரோலினா, அமெரிக்கா
56-0428

64. இப்பொழுது, அந்தவிதமாகத்தான் ஆபிரகாம் செய்து கொண்டிருந்தான். அவன் சரியாக மாறாதவையோடு தரித்திருந்தான். ஜனங்கள், “இங்கே மேலே நம்மோடு தங்கியிருக்கிற அந்த வயதான மனிதனை உங்களுக்குத் தெரியுமா என்று சொல்லுங்கள். அவன் ஏறக்குறைய அரை பைத்தியமாக இருக்கிறான். ஏன், அவனுடைய

மனைவி ஒரு வயதான பெலவீனமான ஸ்திரீ, அவனுக்கு எவ்வளவு வயதிருக்கும் என்று பாருங்கள், அநேகமாக அந்த நரைத்த மீசையும் முடியும் அவனுடைய இடுப்பு வரை தொங்கிக் கொண்டிருக்கிறது, அப்படியிருக்க அவர்கள் ஒரு குழந்தையைக் கொண்டிருக்கப் போகிறான் என்று அவன் கூறுகிறான். அப்படிப்பட்ட காரியத்தை நீங்கள் எப்பொழுதாவது கேட்டதுண்டா? ஏன், அந்த வயதான மனிதன் பைத்தியக்ககாரன்!" என்று கூறினாலும் அது காரியமில்லை.

65. ஆனால் அவன் தேவனை அவருடைய வார்த்தையில் எடுத்தான். ஒவ்வொரு மனிதனும்... இங்கே அது உள்ளது, இப்பொழுது நீங்கள் அதைக்

குறித்துக் கொள்ளலாம்! இவ்வுலகத்தில் எப்பொழுதுவது மிக அதிகமாக எண்ணப்பட்ட ஒவ்வொரு மனிதனும், அவர்கள் தங்களுடைய திடமான விசுவாசத்தின் பேரில் தனியாக நிற்க வேண்டியிருந்த போதிலும், தேவனை அவருடைய வார்த்தையில் எடுத்த மனிதர்களாக இருந்தனர். இந்த தேசத்தினுடைய மகத்தான மனிதர்களாகிய ஜார்ஜ் வாஷிங்டன், வேலி ஃபார்க், ஆபிரகாம் லிங்கன் ஆகியவர்களைக் கவனியுங்கள்; எல்லா மனிதருமே தேவனை நம்பியிருந்த மனிதர்கள் தான். ஆம்.

66. இப்பொழுது, நான் உங்களிடம் கேட்க விரும்புகிறேன். நாம் ஆபிரகாமின் சந்ததியாக இருந்தால், ஆபிரகாம் விசுவாசித்ததைப் போன்று

நாமும் விசுவாசிக்க வேண்டியுள்ளது. இப்பொழுது, கடந்த இரவில், தேவன் உடன்படிக்கையை
உறுதிப்படுத்தினபிறகு, அவர் அவனுக்குத் தரிசனமான இடத்தில் நாம் அவனை விட்டு வந்தோம். இப்பொழுது ஆபிரமாமுக்கு வயதாகி விட்டது, மிகவும் வயதாகி விட்டது: அவர் அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணின பிறகு ஏறக்குறைய இருபத்தைந்து வருடங்கள் ஆகி விட்டன, ஆபிரகாமோ சிறிதளவும் பலவீனமாயிருக்கவில்லை.

ஆபிரகாமுடைய சந்ததி என்று நம்மை நாமே அழைத்துக் கொள்ளுகிற நம்மில் சிலருக்கு இருபத்தைந்து நிமிடங்கள் (கூட) பற்றிக் கொண்டிருக்க முடியவில்லை, இருப்பினும், "நாங்கள்

ஆபிரகாமின் சந்ததியார்; சபை புத்தகத்தில் எங்களுடைய பெயர் உண்டு” என்று கூறுகின்றனர். ஆனால் அது உங்களை ஆபிரகாமின் சந்ததியாராக ஆக்கி விடுவதில்லை.

67. நீங்கள் கிறிஸ்துவுக்குள் மரிக்கும் போது, நீங்கள் ஆபிரகாமின் சந்ததியாராய் இருக்கிறீர்கள். எல்லா முரண்பாடுகளும் சிக்னல் தடங்கல்களும் முடிந்து விட்டன. உங்களுடைய நோக்கங்கள் ஒன்றாகவும், உங்களுடைய இருதயம் ஒன்றாகவும் இருக்கின்றன, நீங்கள் கிறிஸ்துவோடு ஒன்றாக இருக்கிறீர்கள். ஆமென். அவர் கூறினது தான் முதன்மையானது, மற்றவை முட்டாள்தனமானவை. அவ்வளவு

தான். நீங்கள் அதற்காக அவருடைய வார்த்தையை எடுத்துக் கொள்ளுங்கள்.

68. இப்பொழுது, அங்கே ஒரு வயதான மனிதன்... சர்வவல்லமையுள்ள தேவனுடைய நாமத்தில் தேவன் அவனை சந்தித்தார். நாம் அவனைக் கடந்த இரவில், ஆதியாகமம் 17ம் அதிகாரத்தில் விட்டு வந்தோம்... "சர்வவல்லமையுள்ள தேவன்" என்ற எபிரெய வார்த்தையானது *எல்ஷடாய்* என்று கண்டுகொண்டோம், அதற்கு, "மார்பு" அல்லது "ஸ்திரீயினுடைய மார்பகம்" என்று அர்த்தம். தேவன் ஆபிரகாமுக்கு மார்பகமுடைய தேவனாக, மார்புடைய தேவனாக தோன்றினார். அவர், "ஆபிரகாமே, நீ வயது சென்றவனாக இருக்கிறாய், உனக்கு நூறு வயது ஆகிறது,

சாராளுக்கு ஏறத்தாழ நூறு வயது - தொண்ணூறு வயதாகிறது. இருந்த போதிலும் நீ அதற்காக என்னுடைய வார்த்தையை எடுத்திருக்கிறாய், நீ பலவீனனாய் இருக்கிறாய், உன்னுடைய சரீரமானது போய் விட்டது" என்றார்.

அவன் தன் சரீரம் எவ்வளவு அதிகமாக அவ்வளவு செத்துப் போனதை இப்பொழுது எண்ணாதிருந்தான் என்று வேதாகமம் கூறுகிறது.

69. ஓ, அது எனக்குப் பிடிக்கும்! அவன் அதை எண்ணக்கூட இல்லை. என்னே! சக்கர நாற்காலிகளைக் குறித்து எண்ண வேண்டாம், எதையுமே எண்ண வேண்டாம் தேவன் சொன்னதையே எண்ணிப்பாருங்கள். தேவன் சொன்னதைத் தவிர வேறு

எதையும் சிந்திக்கக்கூட வேண்டாம். “அவன் தன் சரீரம் செத்துப் போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப் போனதையும் எண்ணாதிருந்தான். தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய் சந்தேகப்படாமல், தேவனுக்கு துதி செலுத்தி, வல்லவனானான்.”

70. அது இந்த வருடத்தில் சம்பவிக்கவில்லையெனில், அது அடுத்த வருடத்தில் சம்பவிக்கும். அது அடுத்த வருடத்தில் குறிப்பிடத்தக்க சிறப்புடையதாக இருக்கப் போகிறது, ஏனெனில் அது ஒரு வருடம் வித்தியாசமாய் இருக்கும். அவன் ஒரு வருடம் பலவீனமாயிருந்தான், ஒரு வருடம் கடந்து விடும். ஆனால்

தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை காத்துக் கொள்வார் என்று அவன் அறிந்திருந்தான். ஆமென்! எனக்கு அது பிடிக்கும். அவருடைய வாக்குத்தத்தத்தைக் காத்துக் கொள்வார்... அவர் தேவனாக இருக்க வேண்டுமானால், அவர் அதைச் செய்தாக வேண்டும். ஆபிரகாம் தொடர்ந்து தேவனைத் துதித்துக் கொண்டிருந்தான். "சாராளே, நீ இப்பொழுது எவ்வாறு உணருகிறாய்? தேவன் வாக்குத்தத்தம் செய்தது முதற்கொண்டு, 25 வருடங்கள் ஆகிவிட்டன."

"ஆபிரகாமே, எந்த வித்தியாசமும் இல்லை."

“தேவனுக்கு மகிமை, நாம் அதை எப்படியும் கொண்டிருக்கப் போகிறேன்.” ஆமென். சரி.

“குழந்தையானது துளிகூடப் பிசகாமல் கூறப்பட்ட பிரகாரமாகவே பிறக்கப் போகிறது. எல்லா நல்லமாதிரியான துணிமணிகளையும் (Birdseye), அலங்கார ஊசிகளையும் (pins), மற்றும் யாவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டு இளைப்பாறிக் கொண்டிரு; நாம் அதைக் கொண்டிருக்கப் போகிறோம்.”

“ஆபிரகாமே, என்ன சொல்லுகிறீர்?”

“தேவன் அவ்வாறு கூறினார்!”

71. அது அதைத் தீர்த்து வைக்கிறது, “தேவன் அவ்வண்ணமாகக் கூறினார்.” ஓ, அது எனக்குப் பிடிக்கும்.

சகோதரனே, அது பிசாசு தன்னுடைய வாலை அதன் கால்களுக்கு இடையில் வைத்தவாறு தப்பி ஓடச் செய்யும். “தேவன் அவ்வண்ணமாகக் கூறினார்!” அங்கே தான் இயேசு காண்பித்தார்... கிறிஸ்து தம்மிடத்தில் எல்லா குணாதிசயங்களையும் கொண்டிருந்தார், பிதாவானவர் குமாரனுக்குள் இருந்தார். பிதாவானவர் குமாரனுக்குள் இருந்து, உலகத்திற்கு தம்மைத் தாமே ஒப்புரவாக்கினார்... சரியாகச் சொன்னால், உலகத்தைத் தம்மோடு ஒப்புரவாக்கிக் கொண்டார். அவர் சாத்தானைச் சந்தித்த போது, தம்முடைய எந்த வல்லமையையும் ஒருபோதும் உபயோகிக்கவில்லை. கிறிஸ்தவர்களிலேயே பலவீனமானவனும் சாத்தானைத்

தோற்கடிக்க முடியும் என்பதை அவர் நிரூபித்தார். சாத்தான் அவரிடம் வந்த போது, “இப்பொழுது, நீர் தேவனுடைய குமாரனானால், நீர் அவ்வாறு இருந்தால், நீர் அற்புதம் நடப்பிக்கும் மகத்தான ஒருவராய் இருக்கிறீர். நீர் அவ்வாறு இருந்தால், நீர் இங்கே எனக்காக ஒரு அற்புதத்தை நடப்பிக்க நான் விரும்புகிறேன், இந்தக் கல்லுகளை அப்பங்களாக்கி, புசியும். இப்பொழுது, நீர் பசியாயிருக்கிறீர்...” என்றான்.

72. இப்பொழுது கவனியுங்கள், இயேசு தம்முடைய வல்லமையை உபயோகிக்கவில்லை, ஆனால் அவர் அதைச் செய்யவில்லை; அவர் வார்த்தையை உபயோகித்தார். அவர், “மனுஷன் அப்பத்தினாலே

மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே” என்றார்.

அவர் மூன்று தடவையும் சாத்தானுக்கு எதிர்த்து நின்று மூன்று தடவையும் அவனைத் தோற்கடித்தார், “மூன்று” என்பது சாட்சியின் உறுதிப்படுத்துதலாயுள்ளது. ஆமென்!

73. அவர் தேவனுடைய வார்த்தையைக் கொண்டே சாத்தானை அவனுடைய சொந்த நிலத்தில் தோற்கடித்தார். இன்றிரவு இங்கேயுள்ள பெலவீனமான கிறிஸ்தவனும் எங்கும், எந்த இடத்திலும், எந்த நேரத்திலும், “**கர்த்தர் உரைக்கிறதாவது**” என்பதோடு எந்த நிலைமையின் கீழும் சாத்தானைத் தோற்கடிக்க முடியும். சரி. வெறுமனே

அதை விசுவாசியுங்கள். தேவன் அவ்வண்ணமாகக் கூறினார்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"தேவன் அவ்வண்ணமாகக் கூறினார்."

"என்ன..."

"அவருடைய தழும்புகளால் நான் குணமானேன்."

74. அறிக்கை என்பது என்ன? அறிக்கை செய்தல் என்பது "சொல்லப்பட்டதையே திரும்பச் சொல்லுதல்" என்பதாகும். அதுதான் அறிக்கை செய்தல் என்பதாகும். அறிக்கை செய்தல் என்பது சொல்லப்பட்டதையே திரும்ப திரும்ப சொல்லுவதாகும், அவர் சொன்னதையே திரும்பத் திரும்பச்

சொல்லுவதாகும். அவர் சொன்னதையே சொல்லுதல், உங்களுடைய உணர்ச்சி கூறுவதை சொல்ல வேண்டாம், உங்களுடைய அண்டை வீட்டார் கூறுவதை சொல்ல வேண்டாம். தேவன் கூறினதையே சொல். அதை அறிக்கை பண்ணி, அதையே விசுவாசி.

75. உங்களுடைய அறிகுறிகளை நோக்கிப் பார்க்க வேண்டாம்; அறிகுறிகள் என்பது சத்துருவுடைய மோசமான காரியமாகும்... தேவன் அதற்கு விரோதமாக சண்டையிட வேண்டியுள்ளது. அறிகுறிகள். ஒவ்வொருவரும், “நல்லது, எனக்காக ஜெபிக்கப்பட்டது, ஆனால் என்னுடைய கரமானது

சுகமடையவில்லை" என்று கூறுகிறார்கள்.

76. அது அவ்விதமாக ஒருபோதும் இருக்காது. ஒருபோதும் இருக்காது. நீங்கள் உங்களுடைய கரத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய கரத்தை நோக்கிப் பார்க்க வேண்டாம், தேவன் சொன்னதையே நோக்கிப் பாருங்கள். ஆபிரகாம், "இப்பொழுது, சாராளே..." என்று கூறினால் என்னவாக இருக்கும். முதலாவது மாதம். இப்பொழுது, அவளுக்கு ஏறக்குறைய பதினேழு, பதினெட்டு வயதாயிருந்தது முதற்கொண்டு அவன் அவளோடு வருடக்கணக்காக வாழ்ந்து வந்திருக்கிறான், இப்பொழுது இங்கே அவளுக்கு 65 வயதாகி விட்டது,

ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு கடந்து போய் அநேக வருடங்கள் ஆகி விட்டன, பாருங்கள். அவள் பிள்ளைகளைக் கொண்டிருக்கப் போவதாயிருந்தால், அப்போதே அதைக் கொண்டிருந்திருப்பாள். அவர்கள் இருவருமே மலடாய் இருந்தார்கள். அவன், "நல்லது, அவள் எவ்வாறு குழந்தையைக் கொண்டிருக்க முடியும்..." என்று கூறியிருந்தால், அவன் அவ்வாறு கூறியிருந்தால், எப்படியிருக்கும்? ஏன், முதலாவது மாதம் கடந்து போயிற்று, "சாராளே, நீ எவ்வாறு உணருகிறாய்?" என்று கேட்டான்.

அவள், "எந்த வித்தியாசமுமில்லை" என்று சொன்னாள்.

"நல்லது, ஒருக்கால் தேவன் என்னிடம் அதைக் கூறாமல் இருந்திருக்கலாம் என்று ஊகிக்கிறேன்."

77. ஓ, என்னே! தேவன் தம்முடைய நம்பிக்கையை ஆபிரகாமில் வைக்க முடிந்திருக்காது. ஆனால், சாராள் எந்த நிலையில் இருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல, அவன் நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தது சாராளுடைய நிலையை அல்ல; அவன் நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தது தேவன் பண்ணியிருந்த வாக்குத்தத்தத்தைத் தான். அது உங்களுடைய கரத்தின் நிலைமையோ, அல்லது உங்களுடைய காதின் நிலைமையோ, அல்லது உங்களுடைய புற்று நோயின் நிலைமையோ, அல்லது அது எதுவாக இருந்தாலும் அதுவல்ல; நீங்கள்

பார்த்துக் கொண்டிருப்பது தேவனுடைய வார்த்தையைத் தான். தேவன் அவ்வண்ணமாகக் கூறினார். நீங்கள் உண்மையான சரக்குகளைக் கொண்டிருந்தாக வேண்டும்.

---

*(இந்தப் புத்தகம் சரிபார்ப்பில் உள்ளது)*

# உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்களா?



வில்லியம் மரியன் பிரன்ஹாம்



அன்பான சகோதரியே, எப்படியிருக்கிறீர்கள்? உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்களா? உங்களுக்கு என்ன பிரச்சனை இருக்கிறது என்று எனக்குத் தெரியும், ஆனால் இப்போது வரைக்கும் உங்களுடைய சுகத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை. உங்களை இரண்டு பிரச்சனைகள்
தொல்லைபடுத்துகின்றன.
இன்னொன்று உங்களுக்குள் வருவதை நான் பார்க்கிறேன். என்னை

அனுமதியுங்கள்... ஆகவே... நீங்கள் விசுவாசத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்கிறீர்கள், நீங்கள் அதைச் செய்கிறீர்கள் இல்லையா? உங்களையே நீங்கள் அழுத்திக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அதைச் செய்கிறீர்கள் இல்லையா? ஆனால் அது காரியமல்ல. அதை நீங்களே சரிப்படுத்திக் கொள்ளுங்கள். சகோதரியே, “நான் விசுவாசிக்கிறேன்” என்று கூறுங்கள். உங்களால் அதைச் செய்யக் கூடும் என்பதல்ல அது; அது வெறுமனே எளிமையான விசுவாசத்தால்... சற்றே...

என்னுடைய சட்டை என்ன வண்ணத்தில் இருக்கிறது? வெள்ளை நிறம். இப்போது நீங்கள் பார்க்கும்

புலனைப் பெற்றுள்ளீர்கள், அது, அதை வெள்ளை நிறம் என்று கூறுகிறது, இல்லையா? இப்போது, உங்களுடைய விசுவாசம், “நான் இப்போதே சுகமடையப் போகிறேன்” என்று உங்கள் விசுவாசம் கூறுமானால், அதுபோலத்தான் இதுவும். உங்களுடைய பார்க்கும் திறன், இந்தச் சட்டையானது வெள்ளை நிறம் என்று கூறுவது போலத்தான் இதுவும். அது முடிந்து போன காரியம். உங்களுடைய முழு இருதயத்தோடு அதை விசுவாசிக்கிறீர்களா?

*அது எனக்கு சொல்லப்பட்டபடியே நடக்கும், 50-0818, பத்தி எண் E-55*

இப்பொழுது, நீங்கள் சுகமடையப் போகிறீர்கள் என்றால்,

ஒன்றை நினைவு கூருங்கள், யாரோ ஒருவர் தெய்வீக சுகமளித்தலின் வரத்தைப் பெற்றுள்ளார், அந்த வரமே உங்களைச் சுகப்படுத்துகிறது என்று எண்ணாதிருங்கள். தெய்வீக சுகமளித்தலின் மூலமாக நீங்கள் சுகமடையப் போகிறீர்கள் என்றால், அத்தகைய தெய்வீக சுகமளித்தலின் வரத்தை நீங்களே பெற்றிருக்கிறீர்கள். அது கிறிஸ்துவுக்குள் உங்களில் இருக்கும் விசுவாசமாயிருக்கிறது; இந்த மனிதன் அல்ல, அல்லது வேறு எந்த மனிதனாலும் அல்ல. அது தனிப்பட்ட முறையில் கிறிஸ்துவுக்குள் இருக்கிற உங்கள் சொந்த விசுவாசம்.

எங்கள் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?, 51-0719, பத்தி எண் E-24

★★★★★

# உங்களுடைய அறிக்கையின் பேரில், அவர் பிரதான ஆசாரியனாக இருக்கிறார்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

நீங்கள் விதையை விதைக்கும் போது, ஒவ்வொரு நாள் காலையிலும், அது முளைத்திருக்கிறதா என்று பார்ப்பதற்கு தோண்டிப் பார்ப்பதில்லை. அவ்வாறு நீங்கள் செய்வீர்கள் என்றால், உங்களுடைய விதை ஒருபோதும் முளைத்து வராது. நீங்கள் அதை ஊன்ற வேண்டும், மண்ணுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும், அது தனித்திருக்கட்டும். அது இயற்கைக்கும் அந்த வித்துக்கும் உரியது, தேவன் தண்ணீர் பாய்ச்சுகிறார், அது பலன் அளிப்பதைப் பார்க்கிறார். அது உண்மையா?

ஆகவே, தேவனுடைய வார்த்தையோடும் நீங்கள் செய்ய வேண்டிய காரியம் அது தான். நல்ல

எண்ணத்தோடு உங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொள்ளுங்கள், ஏற்கனவே உரம் இடப்பட்டாயிற்று, எல்லா ஊர்வனவைகள், கற்பாறை நிலங்கள், கல்போன்ற சந்தேகங்கள் எடுத்துப் போடப்பட்டு விட்டன. நல்ல வளமான விசுவாசம் என்னும் மண்ணில், அதை விசுவாசியுங்கள், அதை தேவனிடத்தில் விட்டு விடுங்கள், அங்கிருந்து சென்று விடுங்கள், தேவன் உங்களுக்கு என்ன வாக்குப் பண்ணினாரோ அதைப் பெற்றுக் கொண்டீர்கள் என்று சாட்சி கொடுத்துக் கொண்டேயிருங்கள். உங்களுடைய அறிக்கையின் பேரில், அவர் பிரதான ஆசாரியனாக இருக்கிறார். அவர் செய்து முடித்து விட்டார் என்று நீங்கள் கூறும் அறிக்கையில் எல்லாவற்றையும்

சரிப்படுத்துகிறார். அதுதான் சுவிசேஷம்.

*ஜீவனுள்ள தேவனுடைய சபை, 51-0727, பத்தி எண் E-17*

★★★★★

# தேவனுடைய தெய்வீக வாக்குத்தத்தத்தின் பேரிலுள்ள உங்கள் சரியான மனப்பான்மையானது, எந்த ஒரு வாக்குத்தத்தத்தையும் நிறைவேறுதலுக்குக் கொண்டு வரும்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

தேவனுடைய தெய்வீக வாக்குத்தத்தத்தின் பேரிலுள்ள உங்கள் சரியான மனப்பான்மையானது, எந்த ஒரு வாக்குத்தத்தத்தையும் நிறைவேறுதலுக்குக் கொண்டு வரும்.

இப்போது, ஒரு வேளை நீங்கள் அதை நம்பாமல் போகலாம். “நல்லது, என்னுடைய விசுவாசம் பலவீனம் உடையது” என்று நீங்கள் கூறலாம். நான் அதை அறிக்கை செய்ய மாட்டேன். பாருங்கள்? அதைப் பிசாசு அறிந்து விட அனுமதிக்காதீர்கள். “நான் நல்ல விசுவாசத்தைப் பெற்றுள்ளேன், என்னுடைய முழு இருதயத்தோடும் தேவனை விசுவாசிக்கிறேன்” என்று எப்போதும் கூறுங்கள். பாருங்கள்?

பிசாசைக் குறித்து சாட்சி கொடாதிருங்கள்.

உங்களுடைய சுகமாக்குகிறவராக அவரை ஏற்றுக் கொள்ளும்போது, நீங்கள் சுகவீனனாகவோ அல்லது முடமானவனாகவோ என்று ஒருபோதும் செயல்படாதீர்கள். நீங்கள் சுகமாகி விட்டீர்கள் என்று விசுவாசிக்க வேண்டும். அவரை அவருடைய வார்த்தையில் எடுக்க வேண்டும். அதன்பிறகு, கர்த்தருடைய பட்சத்தில் அது முடிந்து போன காரியம், அது உங்களை சார்ந்ததல்ல. பாருங்கள்? நீங்கள்... எந்த மட்டும் தேவனை அவருடைய வார்த்தையில் எடுக்கிறீர்களோ, அதன்பிறகு,

வார்த்தை என்ன செய்யும் என்று வாக்குப்பண்ணப்பட்டுள்ளதோ அதை நிறைவேற்றும்.

அது சரியா? இப்போது, விசுவாசம் கொள்ளுங்கள், உங்கள் முழு இருதயத்தோடும் அவரை நம்புங்கள்.

*வேளை வந்தது, 51-0415 E, பத்தி எண் E-17*

இப்படிப்பட்ட நெருக்கங்கள் செய்யப்பட்டது அல்லது கொண்டுவரப்பட்டது – அதை எப்படிப்பட்ட மனப்பான்மையுடன் எடுத்துக் கொள்வீர்கள் என்பதைப் பார்ப்பதற்காக கொண்டு வரப்பட்டது. பாருங்கள்? அது தேவன், அதை நிரூபிக்கும் நிலையோடு இருப்பதாகும்.

பூமியானது அத்தகையதே, அது நிரூபிக்கும் வயல். அங்கே தான் அவர் அதை உங்களுக்கு நிரூபித்துக் காட்ட முயற்சிக்கிறார்.

*எபிரெயர் – நான்காவது அதிகாரம், 57-0901 E, பத்தி எண் 33*

★★★★★

# விசுவாசம் கேள்வியினாலே வருகிறது



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: தேவனால் அருளப்பட்ட பாதை, டிசம்பர் 1, 1953

211. இப்பொழுது, எலியா, அவன் மலையை விட்டு வருவதை என்னால் கற்பனை செய்துபார்க்க முடிகிறது. ஒருநாள் இறங்கிவந்த வேறொரு மனிதனை எனக்குத் தெரியும், அவனுக்கு குஷ்டரோகம் பிடித்திருந்தது, அவனுடைய பெயர் தான் நாகமான். அவன் அங்கே இறங்கி வந்து, அவன் பெற்றிருந்தான்... "ஓ, என்னே." அவன் கேள்விப்பட்டான்... விசுவாசம் கேள்வியினாலே வருகிறது, இல்லையா? தேவனுடைய வார்த்தையின் மூலமாக கேட்பதினால் வருகிறது. அங்கே சீரியாவில் இருந்த எல்லா மருத்துவர்களையும் அவன் முயற்சி செய்து பார்த்தும், அவர்களில் யாருமே அந்த குஷ்டரோகத்திலிருந்து அவனைக் குணப்படுத்த முடியவில்லை. இந்நிலையில் சிறைப்பிடித்து வந்திருந்த ஒரு சிறு பெண்பிள்ளை அங்கேயிருந்தாள் என்பதை அவன் கேள்விப்பட்டான். அவள் அநேகமாக ஒரு நல்ல கிறிஸ்தவ அனுபவத்தை உடையவளாயிருந்தாள், அல்லது நல்ல - ஒரு நல்ல இரட்சிப்பின்

அனுபவத்தைக் கொண்டிருந்தாள். அவள், “உமக்குத் தெரியுமா, அங்கே எங்கள் தேசத்தில் எலிசா என்ற பெயருடைய ஒரு மனிதர் இருக்கிறார், அவர் தெய்வீக சுகமளித்தலை செய்கிறார். எனக்குத் தெரிந்த வரையில் (Far as), அவரிடம் யாருமே குஷ்டரோகத்திலிருந்து இதுவரை சுகமடைந்ததில்லை, அவர் உமக்காக ஜெபித்தால், நீர் சுகமடைவீர்” என்று கூறினாள். ஓ, என்னே, அப்படிப்பட்ட இன்னும் சில சிறு பெண்பிள்ளைகள் நமக்குத் தேவையாயிருக்கிறது. அது சரியே.

212. சரி. “நல்லது, நாம் சேணம்பூட்டுவோம் என்று நம்புகிறேன்” என்று கூறுகிறான். அந்த மனிதனைக் கவனியுங்கள்: அவன் அநேக மாற்று வஸ்திரங்களையும், அநேக பவுண்டுகள் எடையுள்ள வெள்ளியையும், அநேக பவுண்டுகள் எடையுள்ள தங்கத்தையும் அங்கே எடுத்துக்கொண்டு போனான். இப்பொழுது, அவன்-அவன் தன்னுடைய மனதில் கற்பனை செய்து வைத்திருந்த விதமான தெய்வீக சுகமளித்தலைத்தான் அவன் விரும்பினான், “நான் இந்தவிதமாகத்தான் அதைப் பெற்றுக்கொள்ளப் போகிறேன்.” எனவே அவன் ஓட்டிச் சென்று,

அங்கு போய், அங்கிருந்த எலிசாவுக்கு... முன்பாக நின்றான்.

213. எலிசா இங்கே பின்னால் ஒரு சிறிய பழைய நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருப்பதை என்னால் கற்பனை செய்துபார்க்க முடிகிறது, அவன் தன்னுடைய சிறு மண் குடிசையில் இருந்து, வேதவாக்கியங்களில் சிலவற்றை வாசித்துக் கொண்டிருந்தான். அப்போது இதோ கேயாசி உள்ளே வந்து, அவன், "ஓ, எஜமானரே" என்றான்.

214. "உனக்கு என்ன வேண்டும்?"

215. "நல்லது, அங்கே வெளியிலுள்ள சீரிய சேனைக்கு படைத்தலைவனாகிய மகத்தான நாகமான் அங்கேயிருக்கிறான்; அவனுக்கு குஷ்டரோகம் உள்ளது."

216. "'இந்த யோர்தானில் போய், எழுதரம் முழுகு' என்று அவனிடம் சொல்."

217. "நல்லது, அவனைப் பார்க்கும்படிக்கு நீர் வெளியே போகவில்லையா?"

218. "இல்லை, எனக்கு நேரமில்லை; நான் இப்பொழுது கர்த்தரிடம் பேசிக் கொண்டிருக்கிறேன்."

219. அதனால் அவன், “ஏன், அவர் வேதப்புத்தகம் வாசித்துக் கொண்டும், ஜெபத்திலும் இருக்கிறார்; அவர் வெளியே வர மாட்டார். அவர், ‘யோர்தானில் போய், ஏழுதரம் முழுகச்’ சொன்னார்” என்று கூறுகிறான்.

220. ஓ, அவன் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து உரத்த சத்தமாக பழிதூற்றினானா? ஓ, என்னே. சற்று ஏறக்குறைய இப்பொழுது ஜனங்கள் செய்வதைப் போன்று. “ஓ, அந்தப் பழங்கால இடத்திற்கு நான் மறுபடியும் திரும்ப போகவே மாட்டேன். ம்ம். அந்தப் பரிசுத்த உருளையர்களோடு நான் ஒருக்காலும் எந்த சம்பந்தமும் வைத்துக்கொள்ள மாட்டேன்.” துப்பாக்கிக் குண்டை சாப்பிட்ட ஒரு தவளையைப் போன்று வீங்கி உப்பிப்போய், அதைப் போன்று சுற்றிலும் செல்லுதல். “ஓ, இனிமேலும் அதனோடு எந்த சம்பந்தமும் ஒருக்காலும் வைத்துக்கொள்ளவே மாட்டேன்; நான் அதை விசுவாசிக்க முடியாது, இல்லை, இல்லை, இல்லை, இல்லை.”

221. அந்தக் காரணத்தினால் தான், இப்பொழுது நீங்கள் இருக்கிற இந்த நிலையில் இருக்கிறீர்கள். அது சரியே. தேவனுடைய

வார்த்தையானது பாதையைப் போட்டிருக்கிறது (laid out).

222. "அந்தப் பழைய சேறு நிறைந்த கலங்கிய தண்ணீரில் நான் முழுகுவதா? இல்லை, ஐயா! நல்லது, மேலே சீரியாவிலுள்ள தண்ணீர்கள் இவைகளைக் காட்டிலும் மிகச்சிறந்தது ஆயிற்றே."

223. அன்றொரு நாள் ஒரு நபர் கூறினதைக் கேட்டேன், அவர் சொன்னார், ஓ, அது கொஞ்ச காலத்திற்கு முன்பு, அவர், "நான் அங்கே அந்தப் பீடத்திற்கு இறங்கிப் போய், மூக்கொழுக வேண்டும் என்றும்... அவ்வாறு நான் செய்யப் போகிறேன் என்றா என்னிடம் சொல்ல வருகிறீர்களா," என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், "நான் அங்கே இறங்கிச் சென்று, அழுது, அங்கே கீழேயிருக்கும் அந்த மற்ற ஜனங்களைப் போன்று நீண்ட நேரமாக கதறிக் கொண்டிருக்கவும், சத்தமாக பீறிட்டு அழுது கொண்டும், தேம்பிக் கொண்டிருக்க வேண்டும் என்றா என்னிடம் கூறக் கருதுகிறீர்கள்" என்று கூறினார்.

224. அதற்கு நான், "உமக்கு இரட்சிக்கப்பட விருப்பம், நீர் அதை விரும்புகிறீர்" என்றேன்.

225. “ஓ,” அவர், “நான் ஒருபோதும் அதைச் செய்ய மாட்டேன்” என்று கூறினார்.

226. நான், “அப்படியானால் நீர் இருக்கிறவிதமாகவே தொடர்ந்து செல்லும்” என்றேன்.

227. நான் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தேன், அங்கே ஒரு பெண்மணி இருந்தாள், அவள் அழுதுகொண்டும், தன்னுடைய கரத்தை உயர்த்தி, சத்தமிடவும் தொடங்கினாள். அவன் சிறு வாலிபனாகவும், பாப்டிஸ்டு போதகனாகவும் இருந்தான், அவன் என்னிடம் மேலே வந்து, அவன், “பில்லி, நீர் எப்போது அந்தப் பரிசுத்த உருளையர்களை விட்டு வெளியே வரப் போகிறீர்?” என்று கேட்டார்.

228. நான், “அவர்களை விட்டு வெளியேவா?” என்றேன்.

229. “அந்தப் பரிசுத்த உருளையர்களை விட்டுத் தான், நான் அன்றொரு இரவில், அந்தப் பெண்மணி எழுந்து, தன்னுடைய கரங்களை மேலே உயர்த்தி அழவும் கூச்சல்போடவும் தொடங்கும் வரையில், உம்முடைய செய்தியை கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்தேன்” என்று

கூறினார். நான் சொன்னேன்... "அது உமக்கு இடைஞ்சலாக இல்லையா?" என்று கேட்டார்.

230. அவர், "என்னவென்று உமக்குத் தெரியுமா? அது ஒரு ஜன்னலில் தொங்கும் திரைச்சீலையைப் போன்று என்னுடைய முதுகில் குளிர் நடுக்கம் எழும்பும்படி ஆக்கி விட்டது" என்று கூறினார்.

232. நான், "வாலிபனே, நீ எப்பொழுதாவது பரலோகத்துக்குப் போவாயானால், நீ குளிரால் உறைந்தே மரித்துவிடுவாய். அவர்கள் நிச்சயமாக பரலோகத்திலே சத்தமிட்டுக்கொண்டும், அவ்வாறு தொடர்ந்து செய்துகொண்டுமிருக்கிறார்கள். அது சரியே. அவர்கள் தேவனுடைய பலிபீடத்திற்கு முன்பாக, 'சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்' என்று பரலோகத்தினூடாக இரவும் பகலும் கூச்சல் போட்டுக் கொண்டேயிருக்கிறார்கள்" என்று கூறினேன். ஆமென். ஆம், ஐயா. தேவனால் அருளப்பட்ட பாதை.

233. நீங்கள், "சகோதரன் பிரன்ஹாமே, அந்தப் புது விதமான மார்க்கத்தைத்தானே நீர் போதித்துக் கொண்டிருக்கிறீர்" என்று கேட்கலாம். ஊ-உ, நான் பழங்கால வித மார்க்கத்தின் ஒரு

முற்றிலும் புதிய வகையைத்தான் நான் பெற்றிருக்கிறேன்.

234. "கூச்சலிடுவதும், கத்துவதும் மற்றும் அவ்வாறு தொடர்ந்து செய்வதுமான அங்கேயுள்ள பழங்கால மார்க்கம்?"

235. "ஆமாம், அது சரியே."

236. தேவன் யோபிடம் கூறினார், அவர், "உலகம் அஸ்திபாரம் போடப்பட்ட போது, அந்தப் பழங்கால மார்க்கம் முதலாவது இருந்த போது, நீ எங்கேயிருந்தாய்? ஏன்... அப்போது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய் பாடினார்களே, தேவபுத்திரர் கெம்பீரித்தார்களே?" என்று கூறினார். வியூ. ஓ, சகோதரனே. தேவனால் அருளப்பட்ட பாதை, அவ்வளவு தான். ஆமாம், அப்படியே செய்யும்படி தேவன் கூறியுள்ளதைச் செய்து கொண்டிருப்பது.

237. சரி, முதலாவது காரியம் என்னவென்று தெரியுமா, நாகமான், என்னால் அவனைக் காண முடிகிறது, அவன்: "நான் ஒருபோதும் அங்கே திரும்பிப் போகவே மாட்டேன்" (என்றபடி), பொங்கி எழுந்தவாறு, அங்கிருந்து போய்விட்டான்.

238. "இப்பொழுது, இதோ பாரும் தகப்பனே, ஏதோவொரு கடினமான காரியத்தைச் செய்யும்படி தீர்க்கதரிசி கட்டளையிட்டிருந்தால், நீர் இந்தப் பணம் எல்லாவற்றையும் கொடுத்திருப்பீரே (give you all this money), நீர் சுகத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கொடுத்திருப்பீரே, நல்லது, நீர் அதற்கு சம்மதித்திருப்பீரே. ஆனால் 'யோர்தானுக்குப் போய் முழுகும்படியாக' அவர் உம்மிடம் கூறினதின் நிமித்தமாக, நீர் ஏன் அதைச் செய்வதற்கு விருப்பமில்லாமல் இருக்கிறீர்" என்று கூறும்படியாக, தன்னைக் குறித்து போதுமான இரட்சிப்பை ஒரு மனிதன் உடையவனாயிருந்தான்.

239. "நல்லது, ஒருக்கால் நான் முயற்சித்துப் பார்ப்பேன்" என்று அவன் (கூறுவதை) என்னால் காண முடிகிறது. இதோ அவன் இறங்கிப் போகிறான், உங்களுக்குத் தெரியும், அவன் அங்கே இறங்கிச் சென்று, கீழே அந்த சேறு நிறைந்த யோர்தானைப் பார்க்கிறான், உங்களுக்குத் தெரியும், "ம்ம், அந்த ஒருகூட்ட பரிசுத்... (நான் என்ன கூறக் கருதுகிறேன் என்று உங்களுக்குத் தெரியும்.): நான் அங்கே அந்த இடத்திற்கு இறங்கிப்போக வேண்டுமா?" சரி, அப்படியானால்

உன்னுடைய குஷ்டரோகத்தை நீயே வைத்துக்கொள்.

240. எனவே பிறகு, அவன் கீழே இறங்குகிறான், உங்களுக்குத் தெரியும். நிறைய ஜனங்கள் செய்வது போன்று, அவன் தன்னுடைய உயரமான குதிரையிலிருந்து இறங்குவதை என்னால் காண முடிகிறது, உங்களுக்குத் தெரியும். "நான் அதைப்போன்ற அந்தக்கூட்ட ஜனங்களிடம் இறங்கி வரும்படி என்னை நானே தாழ்த்த வேண்டுமா." எனவே, அங்கே தண்ணீருக்குள் போவதை என்னால் காண முடிகிறது, "ம்ம்," உங்களுக்குத் தெரியும், *இந்த* விதமாக தன்னுடைய மூக்கைப் பிடித்தபடி, கீழே முங்கி, திரும்ப எழும்பி, "ஓ, அங்கே அதில் எதுவும் கிடையாது என்று நான் உங்களிடம் சொன்னேனே. எனக்கு இன்னும் குஷ்டரோகம் இருக்கிறதே" என்று கூறுகிறான்.

241. "உ-ஊ, தீர்க்கதரிசி, 'ஏழுமுறை' என்று கூறியுள்ளார், ஏழு முறை ஆவது மட்டுமாக, அப்படியே தொடர்ந்து முங்கி எழுந்து கொண்டிரும்."

242. "ஆனால் சகோதரன் பிரன்ஹாமே, நான் எவ்வளவு நேரம் முங்க வேண்டும்?"

243. "அது வரைக்கும்."

244. "எது வரைக்கும்?"

245. "நீங்கள் அதைப் பெற்றுக்கொள்வது வரையில், இதைத்தான் இயேசு கூறியுள்ளார்: 'நீங்கள் வல்லமையால் தரிப்பிக்கப்படும் வரைக்கும், எருசலேம் பட்டணத்திலேயே காத்திருங்கள்' என்று அவர் கூறியிருக்கிறார்."

246. "இரண்டு நாட்களா?"

247. "அது வரைக்கும்."

248. "எவ்வளவு காலம்?"

249. "அது வரைக்கும், நீங்கள் தரிப்பிக்கப்படும் வரையில்." அது சரியே. அது வரையில், அப்படியே அங்கேயே தரித்திருங்கள்; அதுதான் கர்த்தருடைய வார்த்தையாக இருக்கிறது.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# டாக்டர் மோசே



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

*செய்தி:* **தேவனால் அருளப்பட்ட சுகமளித்தலின் வழி,** ஜூலை 19, 1954, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

35. இப்பொழுது, இந்தக் கூட்டங்களும் ஜனங்கள் கூடிவருவதும், அதற்காகத்தான்; அது விசுவாசத்தை ஊக்குவித்து (தூண்டுவதற்கும்), விசுவாசத்தை உயர்ந்த



நிலைக்குக் கொண்டுவரவும் தான். நம்மால் சுகமளிக்க முடியாது. நிச்சயமாக முடியாது. ஆனால் அதைச் செய்வதில் ஒரு பாகத்தை உடையவர்களாயிருக்கிறோம். அது

சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதாக இருக்கிறது; அதைச் செய்வதற்கான ஒரு பாகம் அதுதான். வேறொரு பாகம் என்னவென்றால், அந்நிய பாஷைகளில் பேசுவதாக இருக்கிறது. அது வெளிப்பாட்டின் மூலமாக இருக்குமானால், அது பாகத்திலுள்ள ஒன்று தான். ஒரு-ஒரு தீர்க்கதரிசின வரம், அது அதில் வேறொரு பாகமாக இருக்கிறது. அதன்பிறகு அடையாளங்களும் அற்புதங்களும் இருக்கின்றன, எல்லாமே வரங்களாகவும், எல்லாமே சபையை ஊக்குவிக்கும்படியாகவும், சபையை ஒன்றாக வைத்துக்கொள்ளவும் சபையில் இருக்கின்றன. இயேசு மறுபடியுமாக மகிமையில் திரும்பி வருவது மட்டுமாக, இயேசுவுடைய ஜீவனின் ஒவ்வொரு விசேஷ குணத்திற்காகவும் (attribute) இருக்கின்றன. ஆமென்.

இப்பொழுது, உங்கள் சத்துரு பிசாசாக இருக்கிறான். தேவன் ஒவ்வொரு காலத்திலும், ஒவ்வொரு வழியிலும், ஜனங்களை சுகமடைந்தவர்களாக வைக்கும்படி எப்போதுமே

முயற்சித்து வந்திருக்கிறார். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா?

தேவன் சுகமளித்தலுக்கான ஒரு அருளப்பட்ட வழி இல்லாமல் அவர் ஒருபோதும் எந்த நேரத்திலுமே ஜனங்களை



விட்டுவிடவேயில்லை. அவர் எப்போது அதைச் செய்தார் என்பதை, நீங்கள் வேதவாக்கியங்களில் மேற்கோள் காட்டலாம்.

ஜனங்கள் எவ்வளவு மறந்து போயிருந்தாலும், ஜனங்கள் எவ்வளவு வெகு தூரமாக அகன்று போயிருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல, தேவன் சுகமளித்தலுக்கான ஒரு

அருளப்பட்ட வழியை உடையவராகவே இருந்தார்.

அவர் எப்போதுமே அதைக் கொண்டிருந்தார். அதை விசுவாசித்த யாரோ ஒருவரை கூடவே அவர் கொண்டிருக்கத்தான் செய்தார்.

நீண்ட காலத்திற்கு முன்பு, ஆரம்ப காலங்களைப் பாருங்கள், அவர் ஒரு அருளப்பட்ட வழியை உடையவராகவே இருந்தார். அப்போது அவர் ஒரு வெண்கல சர்ப்பத்தைக் கொண்டிருந்தார்;



அதுவே, சரிநேராக திரும்பி, எகிப்து தேசத்தை விட்டு வெளியே வந்து கொண்டிருந்த, இஸ்ரவேல் புத்திரர்களுக்கு தேவனால் அருளப்பட்ட வழியாக இருந்தது. அவர்கள் அணிவகுத்து வரத் தொடங்கின போதே, அங்கே வியாதி இருக்கும் என்பதை அறிந்திருந்தார், எனவே அவர் அப்படியே ஒரு - சொன்னார், நல்லது - அவர் ஒரு வழியை அருளினார்.

36. நான் இங்கே கொஞ்ச காலத்திற்கு முன்பு, இங்கு ஏதோவொரு இடத்தில், மோசே ஒரு மருத்துவராயிருந்தான் என்றும், அவன் வைத்தியனாகிய மோசேயாக இருந்தான் என்றும் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தேன். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா, இல்லையா என்று எனக்குத் தெரியாது, ஆனால் அவன் ஒரு வைத்தியனாக (doctor) இருந்தான். "எகிப்தியரின் சகல ஞானத்திலும் அவன்



கற்பிக்கப்பட்டிருந்தான்" என்று வேதாகமம் கூறுகிறது. அது சரிதானா? இந்நிலையில் அவர்களோ மருத்துவர்களை குறித்து தற்பெருமையாக வீம்புபேச்சுபேசிக் கொண்டிருந்தார்கள். ஓ, என்னே, எனவே, மருத்துவராகிய மோசே...

இங்கே சிகாகோவில் ஏராளமான மருத்துவ விஞ்ஞானம் இருப்பதை நான் கற்பனை செய்து பார்க்கிறேன், மோசே எவ்வாறு 20 இலட்சம் ஜனங்களை நாற்பது



வருடங்களாக ஆரோக்கியமானவர்களாகவும், வலிமை வாய்ந்தவர்களாகவும் பாதுகாப்பாக வைத்திருந்தான் என்பதை அறிய விரும்புகிறேன், அவர்கள் அந்த வனாந்தரத்தை விட்டு வெளியே அணிவகுத்து வந்த போது, அவர்கள் மத்தியில் பலவீனமான ஒருவரும் இல்லாதிருந்தார்கள். அது அற்புதமாக இல்லையா?

அவனிடம் இருந்த அந்த நோய்தீர்க்கும் மருந்துகளில் சிலதை நான் கொண்டிருக்க விரும்பியிருப்பேன், நீங்களும் விரும்பியிருக்க மாட்டீர்களா?

அவன் அங்கே பின்னால் கட்டி–புண் முதலியவற்றிற்கு மெல்லிய துணியின் மேல் வைத்துக்கட்டும் எத்தனை அத்தி பதவாடை பற்றுகளையும் மற்றும் காரியங்களையும் உபயோகித்தானோ என்று வியப்படைகிறேன்? அவன் ... பின்னால் எத்தனை பச்சிலைகளையும் மற்றும் பென்சிலின் தடுப்பூசிகளையும் கொண்டிருந்தான் (பாருங்கள்?)



மருத்துவராகிய மோசே, அவன் எகிப்தை விட்டு வெளியே கொண்டு வந்த 20 இலட்சம் ஜனங்களைக் கொண்டிருந்தான், கிட்டத்தட்ட அவ்வளவு எண்ணிக்கையில் இருந்த

அவர்களை எகிப்தை விட்டு வெளியே கொண்டு வந்து, அவர்களை பாலஸ்தீனத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கே, ஒரு இரவில் எத்தனை குழந்தைகள் பிறந்திருப்பார்கள்? டாக்டர் மோசே போய்ப்பார்க்க வேண்டியிருந்தது. எவ்வளவு ஜனங்களுக்கு வயிற்று வலி இருந்திருக்கும், அவர்கள் நாள் முழுவதும் பாதை நெடுகிலும் தங்களால் கண்டுபிடிக்க முடிந்ததை தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்? ஒவ்வொரு இரவிலும் மருத்துவத்திற்காக எத்தனை பேர் மருத்துவர் மோசேயை அழைத்திருப்பார்கள்? நீங்கள் எப்பொழுதாவது அதைக் குறித்து சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? எவ்வளவு ஜனங்கள் அந்தப் பாறைகளின் மேலும் மற்றும் காரியங்களின் மேலும் விழுந்து, தங்கள் கால்களில் சிராய்ப்புகள் ஏற்பட்டிருக்கும், மேலும் ஒருக்கால், ஒவ்வொரு நாளும் காலையோ அல்லது ஏதோவொன்றையோ, அல்லது அதைப்போன்ற வேறு (எதையோ) உடைத்திருப்பார்கள்? அவர்கள் முறுமுறுத்துக் கொண்டும், பின்வாங்கிக்கொண்டும், மற்ற

எல்லாமாகவும் இருந்த காரணத்தினால், அவர்கள் தொல்லையில் சிக்கிக் கொண்டார்கள். மேலும் மருத்துவர் மோசே...

37. அவனுடைய மருந்துப் பெட்டியை நோக்கி, அவனிடம் என்னவெல்லாம் இருந்தன என்று பார்க்க நீங்கள் விரும்பியிருக்க மாட்டீர்களா? வேதாகமம் அதைக் கொடுக்கிறது. மோசே தன்னோடு வைத்திருந்த ஒவ்வொரு துணுக்கு மருந்தையும் வேதாகமம் கொடுக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா?



உங்களுக்கு அது தெரியுமா? சற்றுநேரத்தில், நான் அதை உங்களுக்குக் காண்பிப்பேன்.

இப்பொழுது, இதோ அவனுடைய மருந்து பெட்டியில் பார்வையிட்டு, இப்பொழுது மோசேயிடம் என்னவிருந்தது என்பதைக் காணப் போகிறோம். யாத்திராகமம், சரி. நாம் பார்ப்போம், இதோ அது இருக்கிறது. இது திறந்திருக்கிறது. "உன்னைச் சுகப்படுத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே." அவனிடம் இருந்த ஒவ்வொரு மருந்துச்சீட்டும் அதுதான். எனவே ஒரு குழந்தை பிறக்கப் போகிறது, தாய் தொல்லையில் இருக்கிறாள் என்று யாராவது கூறும்போது, "உன்னைச் சுகப்படுத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே." ஏதோவொன்று சம்பவித்து ஒரு மனிதன் அவர்களிடம் இருந்து, அவனுடைய கண்களில் ஒன்று வெளியே தள்ளிவிட்டிருந்தால், "உன்னைச் சுகப்படுத்துகிற, உன் தேவனாகிய கர்த்தர் நானே." ஒரு மனிதன் விழுந்து, தன்னுடைய காலை உடைத்துக்கொண்ட போதும், "உன்னைச் சுகப்படுத்துகிற உன் தேவனாகிய

கர்த்தர் நானே.” பிள்ளைகளில் ஒன்றுக்கு மார்சளிக் காய்ச்சல் (pneumonia) இருந்திருந்தாலும், “உன்னைச் சுகப்படுத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே.”

“டாக்டர் மோசே அவர்களே, இன்றிரவு அந்தப் பட்டியலில் நீர் என்ன வைத்திருக்கிறீர்? இன்றிரவு வழியில் என்ன இருக்கிறது? இன்றிரவு சலுகை உரிமைச் சீட்டில் (charter) என்ன இருக்கிறது? எங்களிடம் இங்கே வியாதிப்பட்ட குழந்தை இருக்கிறது.”

மோசேயோ, “உன்னைச் சுகப்படுத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே” என்று சொன்னான்.



“டாக்டர் மோசே அவர்களே, உமக்கு நன்றி, நாங்கள் போய் அதை பயன்படுத்திக்கொள்கிறோம். கர்த்தாவே, இந்தக் குழந்தையைச் சுகப்படுத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நீர் என்று நீர் சொல்லியிருக்கிறீரே, கர்த்தாவே. ஆமென். நாங்கள் உம்மை விசுவாசிக்கிறோம், கர்த்தாவே.” அடுத்த நாள் காலையில், குழந்தை விளையாடிக் கொண்டிருக்கும். அது போதுமானதாக இருந்தது. “உன்னைச் சுகப்படுத்துகிற கர்த்தர் நானே.” மோசேயிடம் இருந்த ஒரே மருந்துக் குறிப்பு (prescription) அதுதான், 20 இலட்சம் ஜனங்கள் அந்த வனாந்தரத்தினூடாக நாற்பது வருடங்களாக கொண்டு வரப்பட்டும், அவர்களோடு அந்த வனாந்தரத்தை விட்டு வெளியே வந்தவர்களில், பலவீனமாகவோ, முடமாகவோ, அல்லது குருடாகவோ இருந்த ஒருவரும் அங்கே இல்லாதிருந்தார்கள். அல்லேலூயா.

மன்னித்துக்கொள்ளுங்கள், அது–அது திடீரென்று செயல்படுவதை நிறுத்த வேண்டியிருந்தது. அது ஏறக்குறைய அரை மணிநேரமாக அங்கே கட்டுப்படுத்திவைக்கப்பட்டிருந்தது. சரி.

38.



“உன்னைச் சுகமாக்குகிற கர்த்தர் நானே.” அவர்களுக்குத் தெரிந்த ஒரே மருந்துக் குறிப்பு (prescription) அதுதான். அது மிக நன்றாக வேலை செய்தது. நாற்பது வருடங்களாக இருபது இலட்சம் ஜனங்களை சுகமாக

வைக்கும் ஒரு மருத்துவரை இன்று எனக்குக் கொடுங்கள் பார்க்கலாம், அவன் நிச்சயமாகவே கொஞ்சம் தொழிலை கொண்டிருந்து, தனக்கு ஒரு நற்பெயரை ஏற்படுத்திக்கொள்வான்.

நல்லது, நான் உங்களுக்குக் கூறுகிறேன், மோசே உபயோகித்த அதே மருந்துக்குறிப்பு இன்று உலகத்திலுள்ள ஒவ்வொரு நபருக்கும் திறந்தேயிருக்கிறது. ஆமென். "விருப்பமுள்ளவன் வந்து, நீரூற் - தண்ணீரிலிருந்து, ஜீவத்தண்ணீரிலிருந்து இலவசமாய்ப் பருகக்கடவன். விருப்பமுள்ளவன் வரக்கடவன்." ஆமென்.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதித் திருத்தம் செய்து வெளிவரும்.)*

*Only believe,*
*Only believe*
*All things are possible,*
*Only believe.*


**சகோ. பினேகாஸ்**

**போன்: 8838623242, 9551855108**